# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள www.supeedsam.com

வியாழக்கிழமை 05.09.2024 supeedsam.com supeedsam@gmail.com


# போரில் 6000 பேர் மாத்திரமே காணாமல் ஆக்கப்பட்டுள்ளனராம்

## சர்வதேச ஊடகத்தில் வெளியான அலி சப்ரியின் கண்டுபிடிப்பு




இலங்கைத்தீவில் 2009 இடம்பெற்ற போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்த, கடத்தப்பட்ட அல்லது வேறு விதத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மிகக் குறைவாக மதிப்பிட்டுள்ளார்.

போர் குற்றங்கள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவின் தனிப்பட்ட சட்டத்தரணியும் தற்போதைய வெளிவிவகார அமைச்சருமான அலி சப்ரி, ஜேர்மன் தொலைக்காட்சி ஊடகமான Deutsche Wela (DW News)' க்கு வழங்கிய நேர்காணலின் போதே இந்த கருத்தை வெளியிட்டிருந்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் (OMP) 6,047 பேர் மாத்திரமே காணாமல் போயுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என கூறியுள்ளார்.

DW ஊடகவியலாளர்,

02 ஆம் பக்கத்தில்...

## உமாகுமரன் - சிறீதரன் சந்திப்பு: இனப்படுகொலை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்துப் பேச்சு



பிரித்தானியாவின் முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழத்தமிழ் வம்சாவழியைச் சேர்ந்தவருமான உமா குமரனை இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு பிரித்தானிய நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## ரணிலின் புதிய கூட்டணி இன்று உதயம்

### பிரச்சாரங்களை தீவிரப்படுத்தவும் திட்டம்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்துள்ள கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து பிரமாண்ட கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுவந்த நிலையில், இதன் அங்குரார்ப்பண நிகழ்வை இன்று வியாழக்கிழமை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

கொழும்பு பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஹேஜ் (Wa-ters Edge) இல் இந்த

02 ஆம் பக்கத்தில்...

## வெற்றியை நோக்கி நகர்கிறாரா அனுர?

### ரணில் – சஜித்தை ஒன்றிணைக்க மீண்டும் முயற்சி



இலங்கையில் இதுவரை எந்தவொரு ஜனாதிபதித் தேர்தலிலும் இல்லாத வகையில் இம்முறை வெற்றிக்கு மும்முனை போட்டி ஏற்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் சாதாரண கட்சியாக இருந்த ஜே.வி.பியால் உருவாக்கப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தி இம்முறை அபரீதமான வளர்ச்சியை அடைந்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியால் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்

02 ஆம் பக்கத்தில்...

## ரணிலின் தோல்வி உறுதியானதா?

### நாடாளுமன்றத்தை கலைக்க உத்தேசம் - கொழும்பு அரசியலில் திருப்பம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களில் ஒருவராக கருதப்படும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தோல்வியடையக் கூடும் என கருத்துக் கணிப்புகளில் பரவலாக கூறப்பட்டு வரும் பின்புலத்தில் அவ்வாறு தோல்வியடையும்

02 ஆம் பக்கத்தில்...

## தபால் மூல வாக்களிப்பைப் புறக்கணியுங்கள்



ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று புதன்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் ஒட்டுமொத்த தமிழ்த் தேசத்து அரச உத்தியோகத்தர்களும் வாக்களிக்காது முழுமையாகப் புறக்கணிக்க வேண்டும் என்ற அழைப்பைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக விடுக்கின்றோம் எனத் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

'இது வெறுமனே தமிழ் மக்களின் நலன்களுக்கானது மாத்திரமல்ல. மாறாக ஒட்டுமொத்த இலங்கைத்தீவு மக்களினதும் நலன்களுக்கானது. ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதன்

02 ஆம் பக்கத்தில்...

# வைத்தியர்களின் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு






**(பாறுக் ஷிஹான்)**

வைத்தியர்களின் பாதகாப்பினை உறுதிப்படுத்துமாறும் வைத்தியர்கள் மீதான அடக்குமுறைகள் நிறுத்தப்பட்டு சுகாதார சேவையில் காணப்படும் குறைபாடுகள் உடனடியாக நீக்கப்பட வேண்டி வைத்திய அதிகாரிகள் ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் செவ்வாய்க்கிழமை(3) கவனயீர்ப்பு போராட்டத்தை மதியம் முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் அம்பாரை மாவட்டம் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை முன்பாக மதியம் ஒன்று கூடிய வைத்தியர்கள் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அரச வைத்திய அதிகாரிகள் தற்போதைய அரசாங்கம் இதுவரை வைத்தியர்கள் எதிர் நோக்கும் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் ஒன்றுமே நிறைவேற்றப்பட வில்லை அத்துடன் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உடனடியாக மக்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி முறையற்ற வைத்தியர்களின் இடமாற்றம் வழங்குவதை நிறுத்த வேண்டும் வாழ்வாதாரத்துக்கு ஏற்ற ஊதியங்களை அதிகரிக்க வேண்டும் வைத்தியசாலையில் நிலவும் ஊழியர் பற்றாக்குறையினை உடன் நிவர்த்தி செய்ய வேண்டும் குறிப்பாக சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தும் தொழிற்சங்கத் தலைவர்களை ஒடுக்கும் நோக்கில் அமுல்படுத்தப்படும் ஒழுக்காற்று விசாரணைகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் இவ்வாறு ஏராளமான பிரச்சனைகள் உள்ளன என குறிப்பிட்டனர்.

மேலும் எதிர்காலத்தில் தாம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு சுகாதார அமைச்சினால் எந்தவொரு தீர்வும் கிடைக்காவிட்டால் நாடு பூராகவும் உள்ள வைத்தியசாலைகளில் அனைத்து சேவைகளையும் நிறுத்தி பணிப்புறக்கணிப்பு ஆர்ப்பாட்டத்தில் குதிப்போம் என தெரிவித்தனர்.

## நானுஓயாவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்



**தலவாக்கலை பி.கேதீஸ்**

நானுஓயா நகரில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.நுவரெலியா பிரதேச சபை மற்றும் நுவரெலியா வைத்திய அதிகாரி காரியாலயம் இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்ததுடன், நானுஓயாவிலுள்ள வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், குடியிருப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்கள் சுகாதார திணைக்கள அதிகாரிகளின் திடீர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.இங்கு, கொடிய டெங்கு நோய் குறித்தும், அதை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, சுகாதாரத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.





வாகரை சின்னத்
தட்டுமுனையில் தமிழ் பொதுக்
கட்டமைப்பு வேட்பாளரை
ஆதரித்து
நேற்று நடைபெற்ற
விழிப்புணர்வுக் கூட்டத்தில்
பிடிக்கப்பட்ட படங்கள்..

## ரணிலின் தோல்வி உறுதியானதா?

**நிலைமை உருவாகுமானால் நாடாளுமன்றத்தை கலைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக தெரியவருகிறது.**

**ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நாளை 4ஆம் திகதி முதல் தபால்மூல வாக்களிப்பு இடம்பெற உள்ளது. தபால் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ரணில் விக்ரமசிங்க பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.**

**அரச ஊழியர்களுக்கு 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சம்பள உயர்வை வழங்கல், விவசாயக் கடன் தள்ளுபடி, வங்கிகளில் உள்ள நகைக்கான வட்டிகள் குறைப்பு உட்பட பல்வேறு தீர்மானங்களை அரசாங்கம் கடந்த சில நாட்களாக அறிவித்து வருகிறது.**

**ஆனால், நாட்டு மக்கள் மத்தியில் ஆட்சி மாற்றத்துக்கான வலுவான ஆதரவு ஏற்பட்டுள்ளன. மக்கள் வெளிப்படுத்தும் கருத்துகளால் நிச்சயமாக இலங்கை ஓர் ஆட்சி மாற்றத்தை நோக்கி நகர்வதாக அரசியல் ஆய்வாளர்களும் தெரிவிக்கின்றனர்.இந்தப் பின்புலத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான சில ஆலோசனைகளும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது.**

**அவ்வாறு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்ற கலைக்கப்பட்டால் புதிதாக தெரிவாகும் ஜனாதிபதி காபந்து அரசாங்கமாக மாறும் ரணில் விக்ரமசிங்கவின் அமைச்சரவையுடன் இணைந்து பணியாற்றும் சூழல் ஏற்படும்.**

**ஆனால், அரசியலமைப்பின் பிரகாரம் புதிய ஜனாதிபதி தாம் விரும்பும் காபந்து அரசாங்கத்தை அமைப்பதற்கான சந்தர்ப்பம் இருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

**என்றாலும், நாடாளுமன்றம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கலைக்கப்பட்டால் மக்கள் மத்தியில் குழப்பகரமான சூழ்நிலைகள் உருவாகும் என்பதுடன், நாடும் பதற்றமான ஓர் நிலைக்குத் தள்ளப்படும் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.**

## உமாகுமரன் - சிறீதரன் சந்திப்பு:

**தமிழ் மக்களின் மீது இலங்கை அரசால் கட்டமைக்கப்பட்ட வகையில் புரியப்பட்ட இனப்படுகொலை, அதற்கான நீதிப் பொறிமுறை, ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் சமகால இன ஒடுக்குமுறைகள், மக்களின் அடுத்தகட்ட எதிர்பார்ப்புகள் நோக்கிய அரசியல் முன்னகர்வுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.**

**குறித்த சந்திப்பில், பிரித்தானிய தொழிற்கட்சிக்கான தமிழர்கள் அமைப்பின் பிரதிநிதி சென் கந்தையா மற்றும் பிரித்தானியாவின் சிரேஷ்ட சட்டத்தரணிகளுள் ஒருவரான கணா கணநாதன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.**

## வெற்றியை நோக்கி நகர்கிறாரா அனுர?

**அனுரகுமார திஸாநாயக்க பிரதான வேட்பாளர்களுள் ஒருவராக உருவெடுத்துள்ளதுடன், சிங்கள மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமான நபராகவும் மாறியுள்ளது.**

**அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் கருத்துக் கணிப்புகளில் தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலில் அதிக வாக்குகளை பெற்றுக்கொள்ள கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்பகின்றன.**

**எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமாச மற்றும் அனுரகுமார** திஸாநாயக்கவுக்கு இடையில்தான் போட்டி நிலவுவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இந்த இருவரை தாண்டி முன்னோக்கி நகரும் பல்வேறு பிரச்சார உத்திகளை கையாண்டு வருகிறார்.

இந்த நிலையில், தேர்தல் அறிவிக்கப்பட்ட தருணத்தில் இருந்ததையும் விட தற்போது தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவு நாடு முழுவதும் பரவலாக அதிகரித்துள்ளதாகவும் வடக்கு, கிழக்கு மற்றும் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்கள் மற்றும் கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட மாவட்டங்களில் மாத்திரமே சஜித் மற்றும் ரணிலுக்கான ஆதரவு இருப்பதாகவும் கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக ரணில் - சஜித்தை ஒன்றிணைக்கும் முயற்சிகளும் இடம்பெறுவதாக தெரியவருகிறது. இருதரப்புகளையும் சேர்ந்தவர்கள் ரணில், சஜித் இணைந்தால் இலகுவாக அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என இருவருக்கும் ஆலோசனைகளை வழங்கியுள்ளதாகவும் பேச்சுவார்த்தைகளை முன்னோக்கி கொண்டுசெல்லும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

தென்னிலங்கையில் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியால் பாரம்பரிய அரசியல் கட்சிகள் கடுமையான நெருங்கடியை சந்தித்துள்ளதாகவும் இம்முறை வெற்றியை உறுதியாக கணிக்க முடியாதுள்ளதால் பல மாற்றங்கள் இலங்கை அரசியலில் அடுத்துவரும் வாரங்களில் ஏற்படும் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## தபால் மூல வாக்களிப்பைப் புறக்கணியுங்கள்

மூலம் ஒற்றையாட்சி அரசமைப்பை நீக்குவதற்கான அழுத்தத்தை ஏற்படுத்தவும் சமஷ்டி அரசமைப்பைக் கொண்டுவரவும் முடியும் என்பதில் நாங்கள் நம்பிக்கையாக இருக்கின்றோம்.' - என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'தமிழ் மக்களின் வாக்குகளைக் குறி வைத்து பிரதான வேட்பாளர்கள் மிகத் தீவிரமான பிரசாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் நானும் இந்த நாடாளுமன்றத்திற்கு வந்த நாளிலிருந்து 75 வருடங்களாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அவையிலுள்ள மூத்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் ஆகியோர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தோம். எனினும், யாரும் இதனைக் கருத்திலெடுக்கவில்லை. இதன் காரணமாக 2022 ஆம் ஆண்டில் இந்த நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு ஆட்சியிலிருந்த ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கு எதிராகவும் அவரது அரசுக்கு எதிராகவும் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடினார்கள். அதன் விளைவாக அவர் ஜனாதிபதிப் பதவியை விட்டு வெளியேறினார். இதன்பின்னர் நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் நாடாளுமன்றத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்களை நோக்கி தான் இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அழைப்பு விடுத்திருந்தார்.

குறிப்பாக எங்கள் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பெயரைக் குறிப்பிட்டுத் தான் இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகவும் நீங்கள் அரைவாசித் தூரம் ஒத்துழைத்தால் கூட இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடுவதாகக் கூறியிருந்தார்.

அதேநேரம் இந்த நாட்டின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாகவிருந்தால் 75 வருடங்களாகத் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையில் பகைமையை வளர்த்து ஒரு இன அழிப்பு யுத்தத்துக்கு வித்திட்ட இந்த நாட்டின் ஒற்றையாட்சி அரசமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இந்த அரசமைப்பை நீக்கி ஒரு சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வர வேண்டும். தமிழ் மக்களின் தேசத்தை அங்கீகரிக்கும் வகையிலும், இனங்களைச் சமத்துவமாக வழிநடத்தக் கூடிய வகையிலும் ஒரு சமஷ்டி அரசமைப்பைக் கொண்டுவருவதன் மூலம் தான் இனங்களுக்கிடையில் ஒரு சமத்துவத்தையும் வீழ்ந்திருக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய முதல் அடியை எடுத்து வைக்க முடியுமென்ற உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்.

இதனை செய்ய தென்னிலங்கை தலைமைகள் தயாராக இல்லை என்பதே அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள விடயங்கள் கூடாக தெளிவாக தெரிகிறது. எனவே, இந்தத் தேர்தலை தமிழ் தேச அரச ஊழியர்கள் புறக்கணிக்க வேண்டும். என்றார்.

## ரணிலின் புதிய கூட்டணி இன்று உதயம்

நிகழ்வு இடம்பெற உள்ளதுடன், நாளை காலை ரணிலை ஆதரிக்கும் அனைத்து எம்.பிகளும் இந்த நிகழ்வில் பங்குபற்றி உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு ரணில் விக்ரமசிங்கவின் தரப்பால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டணியின் தலைவர், செயலாளர் மற்றும் ஏனைய பதவிகள் குறித்த அறிவிப்புகளும் இதன்போது வெளியிடப்பட உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயக முன்னணி உட்பட பல்வேறு கட்சிகள் இந்த கூட்டணி உடன்படிக்கையில் கைச்சாத்திட உள்ளன.

மேற்படி கூட்டணியின் கீழ் ரணிலை ஆதரிக்கும் எம்.பிகள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவும் உத்தேசித்துள்ளனர். இதேவேளை, எதிர்வரும் இரண்டு வாரங்களில் கடுமையான பிரச்சாரங்களை மேற்கொண்டு ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துமாறு ரணிலை ஆதரிக்கும் எம்.பிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அரச தரப்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.

## போரில் 6000 பேர் மாத்திரமே

ஒரு இலட்சம் பேர் காணாமல் போயுள்ளதாக அலி சப்ரியிடம் வினவியிருந்தார்.

அதற்கு அலி சப்ரி,

எங்கிருந்து கண்டெடுக்கப்பட்ட எண்ணிக்கைகள்? யார் கூறியவை? இவை அனைத்தும் பொய். இது மேற்கத்தேய முட்டாள்தனம். ஒரு இலட்சம் என்பது முற்றிலும் பொய். எண்ணிக்கை 6,047 மாத்திரமே என தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறித்த அலி சப்ரியின் கூற்று புலம்பெயர் தமிழர்களால் கூடுதலாக மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கைகள் நம்பகத்தன்மை அற்றதால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

எனினும், சர்வதேச மனித உரிமை அமைப்பான Amnesty International இன் அறிக்கையின்படி, இந்த எண்ணிக்கை 100,000 ஆகும். 60,000-100,000 வழக்குகள் பதிவாகியுள்ள நிலையில், இதுபோன்ற செயல்களில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது என தொடுக்கப்பட்ட மற்றொரு வினாவுக்குப் பதிலளித்த அமைச்சர் அலி சப்ரி, அது புலம்பெயர் தமிழர்களின் மிகைப்படுத்தல் என்றார். அதேவேளை வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம், எட்டு வருடங்களுக்கு மேலாக அமைதிப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில், OMP I ஒரு மோசடி என நிராகரித்துள்ள நிலையில் Deutsche Welle க்கு வழங்கிய நேர்காணலில், காணாமல் போனவர்களின் பெரும்பாலான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சப்ரி தெரிவித்துள்ளார்.

பலாத்காரமாக காணிகள் கையகப்படுத்துதல் மற்றும் கையகப்படுத்தப்பட்ட காணிகள் மீளப்பெறுதல் ஆகிய சர்ச்சைக்குரிய விடயம் தொடர்பாக அமைச்சர் கூறுகையில், 96 வீத காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் இதனை தமிழ் ஆர்வலர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்க மறுப்பதாகவும் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சபையின் 57வது அமர்வு ஜெனீவாவில் ஆரம்பமாவதற்கு சில நாட்களுக்கு முன்னர் அமைச்சர் சப்ரியின் கருத்துக்கள் வெளி வந்துள்ளன, மேலும் இலங்கை மனித உரிமைகள் நடத்தை பற்றிய விவகாரங்கள் ஆரம்ப நாளான செப்டம்பர் 9 ஆம் திகதி விவாதிக்கப்பட உள்ளன.

இலங்கைத்தீவின் ஒற்றையாட்சி முறையின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள சூழலில் இவ்வாறான சர்ச்சையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 2010ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட தருஸ்மன் தலைமையிலான நிபுணர்குழு இறுப்போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாகவும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் காணாமல் ஆக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அதேநேரம் ஜெனீவா மனித உரிமைச் சபையின் வாக்குமூலம் வழங்கிய மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் அமரர் இராஜப்பு ஜோசப் இறுதிப் போரில் ஒன்றரை இலட்சம் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஓஎம்பி எனப்படும் காணாமல் ஆக்கப்பட்டோரை அறியும் அலுவலகம் 2015ஆம் ஆண்டு ஜெனீவா மனித உரிமைச் சபையின் தீர்மானத்துக்கு அமைவாக 2016ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# தங்களுக்குத் தாங்களே வழங்கும் 'தமிழ் வாக்கு'

பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வருவதற்காக முன் நிறுத்தப்படவில்லை. அவர் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்காகவும், கட்சிகளை ஒன்றிணைப்பதற்காகவும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருமித்த குரலில் ஒலிக்கச் செய்வதற்காகவுமே முன் நிறுத்தப்படுகிறார் என தமிழ் தேசிய பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேத்திரனின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்று திரண்ட தமிழ் மக்கள் உலகத்தின் முன்னும் தென்னிலங்கையின் முன்னும் பலமாக நிமிர்ந்து நிற்பார்கள். அதாவது அரியநேத்திரன் அவர்களுக்கு வழங்கப்படும் வாக்குகள் தமிழ்மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கும் வாக்குகள்தான் என அந்த விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழ் தேசிய பொது கட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் தமிழப் பொதுவேட்பாள பாக்கியசெல்வம் அரியநேத்திரனின் தேர்தல் விஞ்ஞாபனம், யாழ்ப்பாணத்தில் தமிழ் பொது வேட்பாளரின் அலுவலகத்தில் வைத்து, செவ்வாய்க்கிழமை (03) வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் உள்ளிட்ட பொதுக்கட்டமைப்பில் உள்ள அரசியல் கட்சி தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசிய இனமானது கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக விடுதலைக்காகப் பல்வேறு வழிமுறைகளில் போராடி வருகிறது. இப்போராட்டத்தின் ஒரு வழிமுறையாகத், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு ஆகிய நாம் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தியுள்ளோம்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு என்பது , தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உள்ள மிகச்சிறு பகுதியினர் தவிர ஏனைய அனைவரும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறார்கள்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு எனப்படும் இந்தக் கூட்டணி கடந்த 15 ஆண்டுகளில், உருவாக்கப்பட்ட கூட்டணிகளில் ஒப்பீட்டளவில் பெரிய அணியாகும். இது தமிழ் ஒற்றுமையின் புதிய நம்பிக்கையாகவும் எதிர்காலத் தமிழ் அரசியலுக்கான பலமான அடித்தளமாகவும் எழுச்சி பெறும்.

இன அழிப்புச் செயற்பாடுகள் தமிழர் தாயகமெங்கும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் தாயகத்தின் நிலத் தொடர்ச்சியைத் துண்டாடுவது, இன விகிதாசாரத்தைக் குறைப்பது, நிலத்தைப் பறிப்பது, தமிழ் மரபுரிமைச் சின்னங்களை அழிப்பது, அங்கே சிங்கள பௌத்த மரபுரிமைச் சின்னங்களை ஸ்தாபிப்பது போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் வெவ்வேறு வடிவங்களே.

இந்த நடவடிக்கைகள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாத தன்மையைக் கொண்டவை. ஸ்ரீலங்கா அரசு என்ற மையத்திலிருந்து உள்நோக்கத்துடன் திட்டமிடப்படுகின்றவை.

தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் ஆக்கிரமிப்பைப் பகலில் சட்டரீதியாகச் செய்கின்றன.

பிக்குகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்கிறார்கள். அவர்கள் சட்டத்தையோ நீதிமன்றத்தையோ காவல்துறையையோ மதிப்பதில்லை. படையினர் இரவுகளில் பௌத்த கட்டுமானங்களை இரகசியமாகக் நிர்மாணிக்கின்றார்கள்.

நிலப்பறிப்பு, சிங்களபௌத்தமயமாக்கல், அரசின் அனுசரணையுடனான குடியேற்ற நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளில் படைத்தரப்பு ஒரு சமாந்தரமான அரசைப் போல செயற்படுகின்றது.

அதில் வடக்கு கிழக்கில் மட்டும் 65,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இனவழிப்புச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அதே வேளை நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைதான் உண்டு என்று பொய்யான தோற்றத்தைக் கட்டியெழுப்பி பன்னாட்டு சமூகத்தை நம்ப வைக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமறுத்து இன அழிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுத்த காரணத்தாலேயே நாடு கடனாளியாகியது. எனவே, இப்பொழுது நாட்டை பிடித்துலுப்பும் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம் யுத்தத்திற்காகப் வாங்கிய கடன் சுமைதான்.

இப்பொழுது தென்னிலங்கையில் வேட்பாளர்களாகக் களமிறங்கியுள்ள அனைவரும் பொருளாதார நெருக்கடி எனப்படுவது இனப்பிரச்சினையின் விளைவுதான் என்பதனை மறைக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கமுடியாது என்ற ஆழமான உண்மையை எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவில்லை.

அவர்களுடைய பரப்புரையின் குவிமையமாக இருப்பது நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து எப்படி மீட்டெடுப்பது என்பதுதான். இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காகத் தமிழ் மக்களால் ஏற்கத்தக்க பொருத்தமான முன்மொழிவு எதனையும் அவர்களில் யாரும் இதுவரை முன்வைக்கவில்லை.

மேற்கண்ட தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுத் தமிழ் மக்கள் இதுவே தமது பொது நிலைப்பாடு என்று உலகுக்கும் தென்னிலங்கைக்கும் வெளிக்காட்ட பொதுக் கட்டமைப்பின் பொது வேட்பாளராகிய திரு.பா.அரியநேத்திரன் அவர்களுடைய சங்குச்சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தவர்களைக் கௌரவிக்கும் வாக்குகள்தான். எனவே தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது தமிழ் மக்களின் தேசியக் கடமையாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தற்போதுள்ள பொருளாதாரம் நிலையானதாக இருக்கும்

தற்போதுள்ள பொருளாதாரம் தனது தலைமையின் கீழ் நிலையானதாக இருக்கும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.



தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் கீழ் உள்ள இருதரப்பு கடன் மற்றும் பலதரப்பு கடன் உடன்படிக்கைகள் உட்பட பல முக்கிய பொருளாதார பிரச்சினைகள் குறித்து அவர் உரையாற்றினார்.

''முதலாவதாக, தற்போதைய பொருளாதாரம் எந்த வகையிலும் வீழ்ச்சியடைய அனுமதிக்கப்படாது என்று நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்கிறோம், இந்தப் பொருளாதாரத்தை மேலும் ஸ்திரமாகவும் வலுவாகவும் முன்னோக்கி நகர்த்துவது தான் மக்களுக்கும் எங்களுக்கும் இடையே உள்ள ஒருமித்த கருத்து.

நாங்கள் இந்த நாட்டின் குடிமக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய இயக்கம். பொறுப்புக்கூறலுக்கு அர்ப்பணிப்புள்ள இயக்கம் என்றார்.

இந்த நேரத்தில்,எவரேனும் ஒருதலைப்பட்சமாக, திட்டத்திலிருந்து விலக நினைத்தால், அது குடிமகன் அல்லது நாட்டிற்கான பொறுப்பை கைவிடுவதாகும் எனவே, சர்வதேச நாணய நிதிய திட்டத்தில் இருந்து எந்த ஒருதலைப்பட்சமான வழியிலும் விலக நாங்கள் எதிர்பார்க்க மாட்டோம் என்று உறுதியளிக்கிறோம் என்றார்.

அடுத்த ஆண்டு முதன்மை இருப்பு இலக்கை 2.3% இல் பேணுதல் மற்றும் 2032 ஆம் ஆண்டளவில் கடன் விகிதத்தை 98 வீதமாகக் குறைத்தல் உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியத்தின் அளவுகளை நிறைவேற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தியின் அர்ப்பணிப்பை அனுர கோடிட்டுக் காட்டினார்.

# அரசியல்வாதிகளால் திருடனைப் பிடிக்க முடியாது

எதிர்வரும் 10 வருடங்களில் நாட்டிற்கு தேவையான அந்நியச் செலாவணியை உருவாக்காவிடின் மீண்டும் நெருக்கடியான நிலை ஏற்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.



பெல்மடுல்ல வாராந்த சந்தை வளாகத்தில் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருந்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு சிறந்த கல்வி, சுகாதாரம் வசதிகளை வழங்க சிறந்த திட்டதை வகுத்துள்ளோம்.

தனிநபர் வருவாயை அதிகரிக்கவும் புரட்சிகரமான திட்டங்கள் முன்னெடுக்க இருக்கிறோம். குறிப்பாக நாட்டில் பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும்.

முதன் முறையாக பெண்களை வலுப்படுத்தும் சட்டத்தை நாம் நிறைவேற்றியுள்ளோம். சகல பொலிஸ் நிலையங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக முறையிட பிரிவு ஆரம்பிக்கப்படும்.

வேறு எந்த கட்சியாவது பெண்களுக்காக இத்தகைய நடவடிக்கை எடுத்துள்ளதா? சமூக நியாய ஆணைக்குழு ஒன்றை உருவாக்க இருக்கிறோம்.

அரசியல் முறைமையையும் மாற்ற இருக்கிறோம். ஏனைய கட்சிகள் மோசடி பற்றி பேசினாலும் உலகில் தலைசிறந்த மோசடி தடுப்புச் சட்டத்தை நாம் தற்போது நிறைவேற்றியுள்ளோம்.

மேலும் சில சட்டங்களை நிறைவேற்ற வேண்டும். திருடர்களைப் பிடிப்பதற்கான சட்டங்களை நாம் பலப்படுத்த வேண்டும். அரசியல்வாதிகளால் திருடனைப் பிடிக்க முடியாது.

அது பொலிஸாரினதும் நீதிமன்றங்களினதும் முக்கிய பணியாகும். மக்கள் சபைகளை உருவாக்கவும் தேர்தல் முறையை மாற்றவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மாற்றம் வேண்டும் என்று கோரி மக்கள் வீதியில் இறங்கினார்கள். அந்த மாற்றத்தை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

முகங்களைப் பாராது கொள்கைக்காகவே மக்கள் வாக்களிக்க வேண்டும்.

சஜித்தினால் வெல்ல முடியாது. சஜித்திற்கு வாக்களித்து அநுரவை பலப்படுத்தாதீர்கள். செப்டம்பர் 21 ஆம் திகதி சிலிண்டருக்கு வாக்களியுங்கள். தவறினால் எரிவாயுவும் இல்லை. எதிர்பார்க்கும் மாற்றமும் நடக்காது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# சீரழிந்து போயிருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பை ஒன்றிணைக்கும் வகையில் மக்கள் தீர்ப்பு அமையவேண்டும்

சீரழிந்து போயிருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பை ஒன்றிணைக்கும் வகையில் மக்கள் தீர்ப்பு அமையவேண்டும் என தமிழ் தேசிய கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை வெளியடப்பட்டது.

இதன்போது உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு தமிழ் மக்களிடையே பெரும் ஆதரவு பெருகிவருகிறது. அதை பார்த்து சிலர் பொறாமைப்படுகின்றனர். சிலர் எரிச்சல் படுகின்றனர். சிலர் எச்சரிக்கை செய்கின்றனர். அவ்வாறானவர்களை சிரிப்போடு கடந்து செல்வோம். அவர்களின் பெயர்களை கூறி அவ்வாறானவர்களை பிரபல்யப்படுத்த நாங்கள் விரும்பவில்லை. தவறுகள் என்பது எல்லோரிடமும் இருக்கின்றது. தவறு இழைத்தவர்கள் அத்தனைபேரும் வருகின்ற 22 ஆம் திகதி தமிழ் மக்கள் அளிக்கும் முடிவைப்பார்த்து திருந்துவார்கள்.

சீரழிந்து போயிருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பை ஒன்றிணைக்கும் வகையில் மக்கள் தீர்ப்பு அமையவேண்டும். ஒன்றிணைந்த வட கிழக்கில் தமிழ் மக்கள் கௌரவமாக வாழக்கூடிய நிரந்தர அரசியல்



தீர்வுக்காக பலரும் உழைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அதை நோக்கியதான தமிழ்ப்பொது வேட்பாளர் நிலைப்பாட்டை வெற்றிபெற வைப்பதற்காக தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் அங்கம்வகிப்பவர்களும் தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர்களும், புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் உறவுகள் என பலவேறு தரப்பினரும் இரவு பகலாக பாடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

சில கட்சிகள் பொது வேட்பாளரை ஆதாரிக்காவிடில் அது செய்தி அல்ல. சங்கை ஆதரித்தால் அதுதான் செய்தி 21 ஆம் திகதிக்கு இடைபட்ட நாட்களில் பல்வேறு கதைகள் வரும். வதந்திகள் வரும். மக்கள் அவை எதையும் பொருட்படுத்தாது சங்கு சின்னத்திற்கு வாக்களித்து தவறிழைப்பவர்களுக்கு தகுந்த பாடத்தை புகட்ட வேண்டும். முடிவு எவ்வாறு அமையும் என எங்களுக்கு நன்றாகவே தெரியும்.

எஞ்சி இருக்கும் 15 நாட்களுக்குள் தவறான முடிவெடுத்தவர்கள் திருந்தி வரவேண்டும். தந்தை செல்வநாயகத்தின் கொள்கைக்காக தமிழரசுக் கட்சியில் இணைந்து செயற்பட்டுவரும் நான் அந்த கொள்கைக்காகவே தமிழ்த் தேசிய பொதுக்கடமைப்பின் அழைப்பை ஏற்று தமிழ்ப் பொது வேட்பாளராக இந்த தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றேன். இதனை உணர்ந்துகொண்டு செப்டெம்பர் 21 ஆம் திகதி தமிழ் மக்கள் ஒன்றிணைந்து சங்கு சின்னத்திற்கு வாக்களித்து தமிழர் ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் என்றார்

# திருமலை மாவட்ட செயலகத்தில் அஞ்சல் மூல வாக்கு அடையாளமிடும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் அலுவலர்களுக்கான செயலமர்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் வாக்கு அடையாளமிடும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் அலுவலர்களுக்கான செயலமர்வு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சாமிந்த ஹெட்டியாரச்சி அவர்களின் தலைமையில் (03) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.





2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு செப்டெம்பர் 04, 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(04) மாவட்ட செயலகம், பொலிஸ் , மற்றும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் கடமையாற்றும் அலுவலர்களுக்கும், (05) ஆம் திகதி ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புப் படையில் கடமையாற்றும் அலுவலர்களுக்கும், (06) ஆம் திகதி ஏனைய அரச நிறுவனங்கள் , பொலிஸ், பாதுகாப்பு படையில் கடமையாற்றும் அலுவலர்களுக்கும் அஞ்சல் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

அஞ்சல் மூல வாக்கு அடையாளமிடும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள், கடமைகள் மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்து திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆர்.சசீலன் மற்றும் அஞ்சல் மூல வாக்கு உதவி தெரிவத்தாட்சி அலுவலர் எஸ்.கே.டி நிரஞ்சன் ஆகியோரால் இதன்போது தெளிவூட்டப்பட்டது.

இவ்செயலமர்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் அஞ்சல் மூல வாக்கு அடையாளமிடும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# ரோபர்ட் நோக்ஸின் வரலாற்று புனைகதை நூல் வெளியீட்டு விழா





எப்.முபாரக்

பர்ஹான் முஸ்தபா அவர்கள் எழுதிய ῾῾மரக்கல மீகாமன்῾῾ ரொபர்ட் நொக்ஸின் வரலாற்று புனைகதை நூல் வெளியீட்டு விழா 2024.09.01 ஞாயிற்றுக் கிழமை மூதூர் பேர்ள் கிரேன்ட் மண்டபத்தில் நடுத்தீவு வலுவூட்டல் மற்றும் நலன்புரி சங்கத்தினால் வெளியீடு செய்யப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலாநிதி றவூப் ஸெய்ன் (கட ஈ), மற்றும் நூல் திறனாய்வாளராக எழுத்தாளரும், ஆய்வாளருமான சிறாஜ் மஸ்ஹூர், அவர்களும் கலந்து சிறப்பித்ததோடு பெருந்திரளான வாசகர்ளும் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வை அஷ்ஷேஹ் மீ.சியாத் (நழீமி) தலமை தாங்கியதோடு, வெளியீட்டு அமைப்பின் தலைவர் எஸ்.எம். முஜீப் அவர்களும் பங்கேற்று நேர முகாமைத்துவத்தின் அடிப்படையில் சிறந்த முறையில் வடிவமைத்து நெறிப்படுத்தி சிறப்பித்திருந்தார்.

சகோதரர் வி.எம்.ஹசீன் அவர்கள் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியதோடு நூலின் முதல் பிரதியினை நூலாசிரியரின் தாயார் சபியா உம்மா மற்றும் பாரியார் ஹிதாயா பர்ஹான் வழங்கி வைக்க தொழிலதிபர் வைத்தியர் வை.ஜெஸ்மின் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இந்நூல் மூதூர் ஜேஎம்ஜ வெளியீட்டகத்தினால் பதிப்பு செய்யப்பட்டதோடு, ஓஹுஜ உரிமையாளர் ஆஷா பாலின் அவர்களினால் நூலாசிரியரின் சார்பில் எழுத்தாளரின் மகள் எப்.ஹரீனா செரீனுக்கு முதல் அரையாண்டுக்கான சிறந்த நாவலுக்கான விருதும் வழங்கி வைக்கப்பட்டது.

# 158 வது தேசிய போலிஸ் தினத்தை முன்னிட்டு ஏறாவூரில் விசேட துஆ பிராத்தனை





(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கையின் 158வது தேசிய பொலிஸ் தினத்தினை சிறப்பிக்கும் வகையில் விஷேட துஆ பிராத்தனை நிகழ்வு கடந்த செவ்வாய்கிழமை ஏறாவூர் முகைதீன் ஜூம்ஆ பள்ளிவாசலின் தலைவர் எஸ்.எல்.எம். நழீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஏறாவூர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு.பியந்த , ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹர்சடி சில்வா உட்பட பொலிஸ் நிலையத்தின் உப பரிசோதகர்கள்,பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள்,

உலமாக்கள்,பள்ளிவாசல் நிருவாகிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர் .

இலங்கை காவல்துறையினரின் நீண்ட ஆயுள் வேண்டியும் நாட்டுக்காக நல்ல பல சேவைகள் தொடரவும் விஷேட பிராத்தனை நிகழ்வுகள் இதன்போது இடம்பெற்றன.

# வரிசை யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த செயல் வீரனை நினைவில் வைத்து அரச உத்தியோகத்தர்கள் வாக்களிக்க வேண்டும்

(த.சுபேசன்)

நாட்டில் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் நிலவிய வரிசை யுகத்தினை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டு வந்த அனுபவம் வாய்ந்த செயல் வீரனை நினைவில் வைத்துக் கொண்டு அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது ஆணையை வழங்க வேண்டும் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்-பாராளுமன்றக் குழுக்களுடைய பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டினுடைய ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார் இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

கடந்த 2019ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி நாட்டு மக்களுக்கு பல கஷ்டங்களை கொடுத்தது.அதனை எவரும் இலகுவில் மறந்து விட முடியாது.

கொரோனா பேரிடர்-பொருளாதார நெருக்கடி அதன் பின்னரான மக்கள் கிளர்ச்சி என அந்தத் துன்பங்கள் வரிசையாக நாட்டை சின்னாபின்னமாக்கின.

இந்த வரிசை யுகங்கள் நாட்டினுடைய சகல மக்களையும் ஏதோவொரு விதத்தில் பாதித்திருந்தது.

குறிப்பாக அரச உத்தியோகத்தர்கள் எரிபொருள்-எரிவாயு உள்ளிட்ட அத்தியவசியப் பொருட்களை பெறுவதற்கு மிகவும் சிரமப்பட்டனர்.



தமது பணிகளை சரிவரச் செய்யும் அதே வேளையில் தமது குடும்பத்திற்கான அத்தியவசியப் பொருட்களையும் பெறுவது அவர்களுக்கு சவால் நிறைந்த ஒன்றாக காணப்பட்டது.

பொருளாதார நெருக்கடி வேளையில் இரவுப் பொழுதிலும் தமது குடும்பத்திற்காக வீதிகளில் வரிசையில் நின்ற அரச உத்தியோகத்தர்கள் ஏராளம்.

பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக ஏற்பட்ட கிளர்ச்சியால் அன்றைய ஆட்சியாளர்கள் ஓடித் தப்பியிருந்தனர். எதிர்கட்சியில் பலமாக இருந்தவர்கள் கூட நாட்டை பொறுப்பேற்கத் தயங்கினர்.

அந்த வேளையில் தான் தனி ஒருவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் மீட்டெடுத்தார்.

அவர் நாட்டினுடைய அடிமட்ட மக்கள் தொடக்கம் அரச உத்தியோகத்தர்கள் வரை ஒவ்வொருவருடைய நலனிலும் அக்கறை காட்டி நாட்டை படிப்படியாக மீட்டெடுத்தார்.

அவ்வாறு நாட்டை மீட்ட தலைவர் சடுதியாக ஒதுங்கினாலோ அல்லது நாம் ஒதுக்கினாலோ இந்த நாடு மீண்டும் இருண்ட யுகம் நோக்கிச் செல்ல சந்தர்ப்பங்கள் ஏராளம்.

மீண்டும் வரிசை யுகம் தலை தூக்கும். டொலரின் பெறுமதி மீண்டும் உச்சம் தொடும்.

இளைய சமுதாயம்,அரச உத்தியோகத்தர்கள் மற்றும் புத்திஜீவிகளுடைய வெளியேற்றம் மீண்டும் தொடர வாய்ப்புக்கள் அதிகம்.

தனது தலையை அடமானம் வைத்து சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புக்களோடு நீண்ட கால ஒப்பந்தங்களை மேற்கொண்டே அவர் இந்த நாட்டை மீட்டார்.நாடு மீண்டு வரும் தருணத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படுவது சர்வதேச உதவிகளை தொடர்ந்தும் தடையின்றி பெற்றுக்கொள்வதில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

தற்போது கூட 2025ஆம் ஆண்டில் அரச உத்தியோகத்தர்களுக்கு அவர்களுடைய பதவி நிலைகளின் அடிப்படையில் சம்பளத்தை 24 தொடக்கம் 50சதவீதம் வரை உயர்த்தி வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

எனவே அரச உத்தியோகத்தர்கள் அடுத்த 5வருட காலத்திற்கு பொருத்தமான தலைவர் ஒருவரை தெரிவு செய்வதில் மிகவும் அவதானத்துடன்-கடந்த கால கசப்பான நிகழ்வுகளை மனதில் நிறுத்தி ஒரு தடவை சிந்தித்து வாக்களிக்க வேண்டும் .என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# இலங்கை போலிஸ் திணைக்களத்தின் 158 வது ஆண்டு நிறைவு: கல்முனையில் துஆ பிரார்த்தனை நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 158 வது ஆண்டு நிறைவு அனுஸ்டிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு பல சமூக நலப்பணிகளும் சமய நிகழ்வுகளும் நாடு முழுவதிலும் செவ்வாய்க்கிழமை(3) இடம் பெறவுள்ளன.



இதனடிப்படையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திலும் இந்நிகழ்விற்கான ஏற்பாடுகள் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆலோசனையில் மும்முரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வினை கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக மேற்பார்வையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலினூடாக கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட் முன்னெடுத்திருந்தார்.

இதன்படி 158 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய ஏற்பாட்டில் துஆ பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது கல்முனை நகர ஜும்மா பள்ளிவாசலில் துஆ பிராத்தனை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தொடர்ந்து கல்முனை முருகன் ஆலயத்திலும் சகல பொலிஸாருக்கும் ஆசி வேண்டி பூஜை நிகழ்வு நடைபெற்றது. இதன்போது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் சமூக பொலிஸ் குழு உறுப்பினர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# ரணில் தான் இன்றும் என்றும் ஜனாதிபதி!

## கல்முனையில் இணைப்பாளர் இராஜேஸ்வரன் இடித்துரைப்பு

( வி.ரி.சகாதேவராஜா)

இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் இன்றும் என்றும் ஜனாதிபதி . அதில் சந்தேகமில்லை. எனவே தமிழ் மக்கள் பொன்னான வாக்குகளை வீணாக்காமல் வெற்றி பெறும் குதிரைக்கு வாக்களித்து பங்காளராகுங்கள்.

இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச இணைப்பாளர் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் முருகேசு இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து (03) நற்பிட்டிமுனையில் இடம்பெற்ற பிரச்சார முன்னோடி கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். சிலவேளை ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தால் முழு நாடும் தோல்வியடையும். மீண்டும் வரிசை யுகம் உருவாகும் என்றார்.

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் பணிமனை வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவிருப்பதை ஒட்டி மாதர் சங்கங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து அவரது இல்லத்தில் முன்னோடிக் கூட்டத்தை நடாத்தினார்.





அவர் மேலும் கூறுகையில்,

எமது மக்களின் அமோக ஆதரவுடன் அவர் ஜனாதிபதி ஆவார்.

எமது மாவட்டத்தில் உள்ள தமிழ் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. அதனை சீர் செய்ய வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவான பிறகு வரிசையுகத்துக்கு முடிவுகட்டினார். பொருளாதாரத்தை மேம்படுத்த திட்டங்களை வகுத்தார். இன்று ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருகிறது. பொருட்களின் விலைகளும் குறைந்துள்ளன. சுற்றுலாப்பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. எமது அரச தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வும் வழங்கப்படவுள்ளது.

எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டை ஆளவேண்டியது கட்டாய தேவையாகும். இன்னும் ஐந்தாண்டுகளுக்கு அவரின் தலைமைத்துவம் இருந்தால் இந் நாடு நிச்சயம் முன்னேறும். சிலவேளை ரணில் விக்கிரமசிங்க தோற்றால் அது தனி மனிதனுக்குரிய தோல்வி அல்ல, நாட்டின் தோல்வியாகும். அதுமட்டுமல்ல, மீண்டும் வரிசை யுகம் உருவாகும்.

இது தேர்தல் காலம் என்பதால் சில ஜனாதிபதி வேட்பாளர்கள் அதை வழங்குவேன், இதை வழங்குவேன் என உறுதிமொழி வழங்கலாம். ஆனால் எதுவும் நடக்கப்போவதில்லை. நடைமுறைக்கு சாத்தியமான உறுதிமொழிகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். எனவே, அவர் எமது மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவார் என்றார்.

எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் எனது பூரண ஆதரவினை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு வழங்குவதாக முடிவெடுத்துள்ளேன் என்றும் அவர் கூறினார்.

மேலும் தெரிவிக்கையில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் படும் துன்பங்கள் கொஞ்சநஞ்சம் அல்ல தொடர்ச்சியாக எமது மக்களை ஏமாற்றிக்கொண்டு ஒரு சில அரசியல்வாதிகள் தங்களுடைய சுயலாபங்களை அடைந்தவையே மிச்சம். எல்லா மாவட்டங்களிலும் ஒப்பிடும் பொழுது அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேசங்கள் அனைத்தும் பின் தங்கியே காணப்படுகின்றது. எதிர்காலத்தில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை அங்கு வசிக்கின்ற மக்களே ஆள வேண்டும் அவர்களுக்கான சகல விதமான முடிவுகளையும் அவர்களே எடுக்க வேண்டும் எதிர்கால சிந்தனை( எதிர்வர இருக்கின்ற தேர்தல்கள் ) அவ்வாறு இருந்தால் மாத்திரமே இளைஞர்களின் தொழில் வாய்ப்புகளும் சரி அபிவிருத்தியிலும் சரி கொள்கையிலும் சரி எந்தவிதமான குறுக்கீடுகளும் இல்லாமல் சிறந்த முடிவுகள் எட்டப்படும். ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு நமது மக்களுக்கான வாய்ப்பாக நடைபெறுகின்ற ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்துவதை எதிர்பார்க்கின்றேன் என்றார்.

---

## மட்டக்களப்பில் சுமுகமான முறையில் இடம்பெற்ற
# ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு!!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான் )

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் உள்ளிட்ட அரச திணைக்களங்களில் ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று சுமுகமான முறையில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு (04) திகதி காலை 8.30 மணி முதல் ஆரம்பமாகி தபால் மூல வாக்களிப்பு சுமுகமான நிலையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி. ஜஸ்டினா முரளீதரன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் மேற்பார்வையின் கீழ் தபால் மூல வாக்களிப்பானது மட்டக்களப்பு மாவட்ட செயலகம் உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களிலும் இடம்பெற்று வருவதுடன் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் 290 உத்தியோகத்தர்களும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் 404 உத்தியோகத்தர்களும் தபால் மூல வாக்களிப்பிற்கு தகுதி பெற்றுள்ளனர்.

திராய்மடுவில் அமைந்துள்ள புதிய மாவட்ட செயலகத்திலும், மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்திலும் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களில் கட்சிகள் சார்பில் பிரதி நிதிகள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தபால் மூல வாக்களிப்பு செயற்பாட்டில் மாவட்ட செயலக மற்றும் பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள் மிகவும் ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்ட தனையும் அவதானிக்க முடிகின்றது.

---

# சிரேஷ்ட தலைமை தாங்கும்
## அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வு!!






(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

ஜனாதிபதித் தேர்தலில் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வு மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி.ஜஸ்டினா முரளீதரன் தலைமையில் இடம் பெற்ற சிரேஸ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி செயலமர்வானது மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் (02) திகதி இடம் பெற்றது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் போது மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த விடையங்கள் தொடர்பாகவும், தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் இதன் போது விரிவாக தெளிவூட்டப்பட்டது.

இந் நிகழ்வில் உதவி தெரிவத்தாட்சியகர் ஸ்ரீ.ஜெய்தனன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



---

# மன்னார் மாவட்டத்துக்கு பெருமை சேர்த்து தந்த வீரர்களுக்கு கௌரவிப்பு





(வாஸ் கூஞ்ஞ)

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் கடந்த வாரம் யாழ் துரையப்பா விளையாட்ட அரங்கில் இடம்பெற்றது.

இதில் டக்கு மாகாணத்தைச் சேர்ந்த 13 கல்வி வலயங்களைச் சார்ந்த 1200 பாடசாலைகள் பங்கு பற்றியிருந்தன.

இதில் மன்னார் கல்வி வலயம் மூன்றாவது தடவையாக முதலாம் இடத்தைப் பெற்று சாதனைப் படைத்துள்ளதாக மன்னார் கல்வி வலயம் தெரிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு முதல் தடவையாக இவ்வாறான விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தையும் 2023 ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாக முதலாம் இடத்தையும் . தற்பொழத 2024 ஆம் ஆண்டு முன்றாவது தடவையாக தொடர்ச்சியாக முதலாம் இடத்தையும் மன்னார் கல்வி வலயம் பெருமை சேர்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை முன்னிட்டு வெற்றியீட்டிய வீரர்களை மன்னார் கல்வி வலயம் கௌரவிக்கும் முகமாக திங்கள் கிழமை (02) காலை இவர்களை மன்னார் நகரத்திலிருந்து மன்னார் கல்வி வலயம் வரை பேண்ட் வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வுக்கு மன்னார் கல்வி வலயப் பணிப்பாளர் செல்வி ஜீ.டீ.தேவராஜா அவர்களும் மன்னார் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் பி.ஞானராஜ் . ஏ.பிரேம்தாஸ் அவர்களும் கல்வி அபிவிருத்தி பிரதி கல்விப் பணிப்பாளர் கல்வி நிர்வாக அதிகாரிகள் . நானாட்டான் மற்றும் மன்னார் கோட்டக் கல்வி அதிகாரிகளும் ஏனைய கல்வி திணைக்களத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் , ஆசிரியர் ஆலோசகர்கள் , நிர்வாக உத்தியோகத்தர்கள் , பாடசாலை அதிபர்கள் , அசிரியர்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# சுகாதார காரியாலயத்தை வேறு இடத்திற்கு இடமாற்றகோரி மக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு முன்பாக அங்கு சிகிச்சைக்காக தமது குழந்தைகளை சுமந்து வந்த தாய்மார்கள் மற்றும் பொதுமக்களால் கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று (4) முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டம் குறித்து தெரியவருவதாவது நுவரெலியா பிராந்திய சுகாதார காரியாலய பிரிவுக்குட்பட்ட லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் அமைந்துள்ள கட்டிடத்தின் பின்புறத்தில் காணப்படும் பாரிய மண்மேட்டிலிருந்து மண்சரிவு மற்றும் பாறைகள் சரிந்து விழும் அபாயம் உள்ளதால், அந்த இடத்தை காலி செய்யுமாறு லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்ட போதிலும், அதற்கான பொருத்தமான கட்டிடத்தை வழங்குவதற்கு அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கடந்த வாரம் இந்த காரியாலயம் அமைந்துள்ள பகுதியிலுள்ள மலை உச்சியில் இருந்து கற்கள் உருண்டு விழுந்ததில் காரியாலய கட்டிடம் பலத்த சேதம் அடைந்துள்ளதாகவும், இதனால் தங்களது உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

மேலும் இங்கு சில நாட்களாக கட்டிடத்தின் மீது கற்பாறைகள் மற்றும் மண்மேடுகள் சில சரிந்து விழுவதாக அங்கு பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மேற்கூரை, கட்டிடத்தின் ஓடுகள் உடைந்துள்ளதாகவும் , சுவர்கள், கதவுகள், ஜன்னல்கள் என்பன பலத்த சேதமடைந்துள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இங்கு தெரிவித்தனர்.

இக்கட்டடத்தின் பின்புறமாக கற்கள் உருண்டு கிடப்பதால் இங்கு சிகிச்சைக்கு வரும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இக்கட்டடத்தை விட்டு வெளியேறுமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் கடந்த காலங்களில் அறிவித்திருந்த போதிலும் இதுவரை சுகாதார வைத்திய அதிகாரி கட்டிடத்தை உரிய இடத்திற்கு மாற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை.

சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் மற்றும் ஊழியர்களின் உயிர்கள் பாதிக்கப்பட வேண்டும் எனவும் இந்த கட்டிடத்தை வேறு பாதுகாப்பான இடத்திற்கு விரைவில் மாற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென போராட்டத்தில் ஈடுப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கெயார் லங்கா அறக்கட்டளையின் ஈராண்டு பூர்த்தி விழா மற்றும் பரிசளிப்பு விழா



(அட்டன் ரஜினி)

கெயார் லங்கா அறக்கட்டளையின் ஈராண்டு பூர்த்தி விழா மற்றும் பரிசளிப்பு விழா , ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு பிரதான மண்டபத்தில் அறக்கட்டளையின் ஸ்தாபகப்பணிப்பாளர் அருச்சுனி தலைமையில் நடைபெற்றது.

இதன் போது கெயார் லங்கா அறக்கட்டளையின் மூலம் கடந்த வாரம் நுவரெலியா மற்றும் ஹட்டன் கல்வி வலய பாடசாலைகளின் மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற சதுரங்க விளையாட்டு போட்டியில் பங்கு பற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிழ்வில் இலங்கை திறந்த பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் திரு அ.கு. சந்திரபோஸ் அவர்களும், நுவரெலியா கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.ஞ. கணேஷராஜ், ஹைலன்ஸ் கல்லூரியின் அதிபர் திரு ராஜன், உதவி அதிபர் திருமதி. தேன்மொழி, கெயார் லங்கா அறக்கட்டளையின் பணிப்பாளர் டாக்டர் ரமேஷ்குமார், உறுப்பினர்களான திரு. கணேஷன் இளையராஜா, செல்வி. பிளசினா, திரு.ரூபதர்ஷன், பாசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# அம்பாறை மாவட்ட தேர்தல் செயற்பாடுகளுக்கு மு.கா தலைவரினால் விசேட குழு நியமனம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக அம்பாறை மாவட்டத்தில் சகல செயற்பாடுகளையும்முன்னெடுக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமினால் விசேட குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.



இக்குழுவின் தலைவராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல். அப்துல் மஜீத் நியமிக்கப்பட்டுள்ளதுடன் உறுப்பினர்களாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய பொருளாளரும், முன்னாள் கல்முனை மாநகர பிரதி மேயருமான றஃமத் மன்சூர், பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளரும் முன்னாள் கல்முனை மாநகர மேயருமான சிறாஸ் மீரா சாகிப், அரசியல் மற்றும் சமைய விவகார இணைப்பாளர் எம்.ரீ. சப்றாஸ், உச்ச பீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளருமான ஏ.சீ. சமால்டீன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழு ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சகல செயற்பாடுகளையும் முன்னெடுக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இக்குழுவுக்கு அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சகல உச்சபீட உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் பிரதி தலைவர்கள் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள், கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள், பிரமுகர்கள் மற்றும் போராளிகள் அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் மட்டக்களப்பில் நேற்று முதல் ஆரம்பம்!!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஒன்பதாவது ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்காக எதிர்வரும் செப்டெம்பர் 21 திகதி இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டைகள் (03) திகதி முதல் அஞ்சல் திணைக்களத்தின் ஊடாக நாடு பூராகவும் விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் அஞ்சல் சேவையூடாக கிராமங்கள் தோறும் விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு, கல்குடா மற்றும் மட்டக்களப்பு ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் இன்று முதல் முன்னெடுக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா தேர்தல் தொகுதியில் 134,104 வாக்காளர்களும் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் 210,293 வாக்காளர்களும் பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் 105,289 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலிற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் மட்டக்களப்பு பிரதான அஞ்சல் அலுவலகத்தின் ஊடாக இன்று முதல் விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தற்கோலைகது எதிரான விழிப்புணர்வு தோடர் சைக்கிளோட்டம்




தற்கொலைகது எதிரான விழிப்புணர்வு தொடர் சைக்கிளோட்டம், தற்கொலைகளை தடுக்கும் வகையில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட தொடர் சைக்கிளோட்டம், திருகோணமலையை செவ்வாய்க்கிழமை (03-09-2024) வந்தடைந்தது.

இத் தொடர் சைக்கிளோட்ட வீரர்களை திருகோணமலை றோட்டரிக் கழக அங்கத்தவர்களால் வரவேற்கப்பட்டார்கள்.. தைரியம்,இரக்கம், பொறுப்பேற்றல் என்ற பெயரையுடைய, தன்னார்வ தொண்டர் நிறுவனம், ரோட்டரிக் கழக அனுசரணையுடன் இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கையில் நாளொன்றுக்கு தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை 11பேர் ஆக உள்ளது. தற்கொலை முயற்சிகளை தடுப்பதுடன், மக்களின் உளவள நலனை மேம்படுத்தவும் தற்கொலை எண்ணத்துக்கு தூண்டப்படுபவர்களுக்கு உளவள ஆலோசனைகளை வழங்கி, அதிலிருந்து விடுவிப்பதற்கான வழி வகையினை ஏற்படுத்துவதற்குமாகவே இவ் விழிப்புணர்வூட்டல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிசிசி 1333 (ccc1333) என்னும் இலவச ஆலோசனை வழங்கும் தொலைபேசி இலக்கத்தை பொதுமக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதனை நோக்காக கொண்டு, இலங்கையின் 12 மாவட்டங்களை உள்ளடக்கியதாக தொடர் துவிச்சக்கர வண்டியோட்ட நிகழ்வை நடாத்தி வருகின்றது. இத் தொடர்சைக்கிளோட்டமானது திருகோணமலைக்கு வந்தடைந்தது அவர்களுக்கு மதிய உணவு ரோட்டரிஇல்லத்தில் கொடுக்கப் பட்டது .

பின்னர் தற்கொலையின் தாக்கம் குறித்து மக்களை விழிப்பூட்டும் முகமாக நிகழ்ச்சி ஒன்றும் நடாத்தப்பட்டது. அத்துடன் தற்கொலை மனப்பாங்கை நீக்கக்கூடிய ஆலோசனைகள் 1333 என்ற தொலைபேசி இலக்கம் அடங்கிய கையேடுகளை பொது மக்களுக்கு விநியோகிக்கப் பட்டது.

# ஜனாதிபதித் தேர்தல் 2024



மில்லியன் கணக்கில் வாக்குகளை
பெற்று வெற்றிபெற
மில்லியன் கணக்கில்
வாக்காளர், பார்வையாளர்களைக்
கொண்ட சுபீட்சம் ஊடகத்தில்
குறைந்த விலையில்
விளம்பரங்களை வெளியிடுங்கள்

077 664 5232 / 077 311 2601